மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 56/2018

பெயர் – மாரிச்சாமி(வா.சா.1)

நாள் – 09.09.2024

2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கின் 2ம் வாதி துரைச்சாமி எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா ஆகும். 3ம் வாதி ஜெயமணி இன்னொரு சித்தப்பாவான சின்னச்சாமி என்பவரின் மனைவி ஆவார். 5ம் வாதி ராமச்சந்திரன் எனது அத்தை ஆண்டாளின் கணவர் ஆவார். 6 முதல் 8 வாதிகள் 2ம் வாதி துரைச்சாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். துரைச்சாமி 2019ம் ஆண்டு இறந்தார். எனது அத்தை ஆண்டாள் 2020ம் ஆண்டு இறந்தார். எனது சித்தப்பா சின்னச்சாமி 2006ம் ஆண்டு இறந்தார். எனது சித்தப்பாக்கள் துரைச்சாமி, சின்னச்சாமி, அத்தை ஆண்டாள் ஆகியோர்களின் வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படியார்களின் வாரிசு சான்றிதழ்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் தான் அவர்களின் உண்மையான வாரிசுகள் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தில் பாதை அமைக்கிறார்கள். அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது இடத்திற்கான சர்வே எண், விஸ்தீரணம் என்ன என்றால் சர்வே எண்கள்.765/3, 765/4, 801/1, 801/3, 801/4, விஸ்தீரணத்தை குறிப்பிட்டு சொல்ல முடியாது. மொத்தம் 4 ஏக்கர் ஆகும். தாவா 1வது அயிட்ட சொத்து யாருக்கு எப்படி பாத்தியம் என்றால் அய்யலுச்சாமியின் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. 1வது அயிட்ட சொத்து கிரையம் பெறப்பட்ட சொத்து என்று தான் எனது நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்றால் பட்டா எண்.38ல் உள்ளது. அய்யலுச்சாமி பெயரில் உள்ளது. அவர் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் உள்ளது. பட்டா எண்.404 பூர்வீக சொத்தாகும். மேற்படி சொத்துகளில் விவசாயம் செய்யப்படுகிறதா என்றால் 15 வருடங்களுக்கு முன்பு விவசாயம் செய்யப்பட்டது. தற்போது தரிசாக உள்ளது. மேற்படி

நிலங்களை நான் அனுபவிப்பதாக யாதொரு ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. கூட்டாக தான் அனுபவித்து வருகிறோம். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி யார் என்றால் முகமது குஞ்சு ஆகும். அவர் மீது இந்த வழக்கை பாதைக்காக தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி அவருக்குரிய இடத்தில் தான் பாதை அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் நிலத்தில் பாதை அமைத்துள்ளார். 20.05.2013ம் தேதி 1ம் பிரதிவாதி, சிவக்குமார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று, அந்த இடத்தில் பாதை அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக யாருக்கொல்லாம் மனு கொடுத்திருந்தேன் என்றால் தாசில்தார், ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர்களிடம் மனு கொடுத்திருந்தேன். அந்த மனு என் பெயரில் அனுப்பி நான் கையொப்பம் செய்துள்ளேன். அந்த மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் 20.07.2018ல் மனு அனுப்பியுள்ளேன். நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பிரதிவாதிகளுக்கு அனுப்பிய மனுவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மட்டும் தான் மனு அனுப்பியுள்ளேன் என்றாலும், வேறு யாரும் அனுப்பவில்லை என்றாலும், என் சார்பாக வேறு யாரும் அனுப்பவில்லை என்றாலும் சரிதான். அவ்வாறு அனுப்பியிருந்தால் அந்த மனு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி நசிமா 1ம் பிரதிவாதியின் மனைவி ஆவார். 4ம் பிரதிவாதியின் பெயரில் 09.03.2017ம் தேதி சூரங்குடி கிராம சர்வே எண்.805/2ல் M/s.Lion Fire Works என்ற பெயரில் பட்டாசு தொழிற்சாலை ஆரம்பிக்க 2ம் பிரதிவாதியிடம் மனு செய்து அதன் பேரில் 2ம் பிரதிவாதியின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களிடமிருந்து அனுமதி பெற்று தொழிற்சாலை அமைப்பதற்கான அனுமதி கடித எண்.நி.மு.இ.4/6807/2017ல் 03.07.2018ம் தேதி 3ம் பிரதிவாதியால் அனுமதி வழங்கப்பட்டது என்றால் தெரியாது. இந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிராம கணக்கு வரைபடங்கள் மற்றும் ஆவணங்களை பார்வையிடும் போது சர்வே எண்.805/1ல் மேற்புறத்திலிருந்து தொடங்கி சர்வே எண்.805/1வழியாக சர்வே எண்.765 தொடர்கிறது என்றும், அந்த வண்டிபாதை சர்வே எண்.765/2A ல் தொடங்கி தென்மேற்கு பகுதியில் தொடங்கி சர்வே எண்.765/2B வழியாக சர்வே எண்.762 ஐ

சென்றடைகிறது என்றால் தெரியாது. இந்த பாதை இருக்கும் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியால் கிராம கணக்கு மற்றும் வரைபடத்தை பார்வையிடும் போது சர்வே எண்.805ல் உள்ள சுமார் 9 ஏக்கர் 40 சென்ட் நிலத்தை ஓ.மேட்டுபட்டியை சேர்ந்த சிவக்குமார் என்பவரிடமிருந்து 20.05.2013ம் தேதி கிரையம் பெறப்பட்டு, சர்வே எண்.805ன் மேற்குபுறத்தில் சுமார் 35 சென்ட் நிலத்தை சூரங்குடி கிராம பொது மக்கள் பொது பயன்பட்டிற்காக தமிழக ஆளுநருக்கு சாத்தூர் பஞ்சாயத்து ஆணையர் மூலமாக நன்கொடை எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. அவ்வாறு எழுதிக் கொடுத்ததால் சர்வே எண்.805 ஆனது 805/1, 805/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு 805/1ல் கண்ட 34 சென்ட் புஞ்சை நிலம் சூரங்குடி கிராம பொது மக்களின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்.805 உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பாக கிராம அடங்கல் மற்றும் கிராம கணக்குகளில் வண்டிபாதையாக தான் உள்ளது என்றால் விவசாய நிலம் என்பதால் அறுவடை நேரங்களில் மட்டும் போய் வருவார்கள். எனக்கு பாத்தியப்பட்டதாக கூறப்படும் சர்வே எண்.801/1, 801/3, 801/4 ஆகிய இடங்கள் சர்வே எண்.805/1, 805/2 அருகில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.805/2ல் தான் முறையாக அனுமதி பெற்று லயன் பயர் ஓர்க்ஸ் இயங்கி வருகிறது என்றால் தெரியாது. அந்த இடத்தில் பயர் ஓர்க்ஸ் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சர்வே எண்.805 நிலங்களை சுற்றிலும் சர்வே எண்கள்.796, 797, 798, 804, 806, 807, 809, 810 உள்ளன என்றால் சரிதான். வேறு இடங்கள் இல்லை என்றால் சரிதான். நான் பரிகாரம் கோரியுள்ள சர்வே எண்களுக்கும் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சர்வே எண்ணுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2, 3, 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதி பட்டாசு உரிமம் கோரி தாக்கல் செய்த மனுவின் பேரில் முறையாக விசாரணை செய்து ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து அவர்களது கடமைகளை சரிவர செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே இந்த பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.